**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2021ம் வருடம் நவம்பர் திங்கள் 24ம் நாள் புதன்கிழமை
**அ.வ.எண்.389/2020 இன் இ.ம.எண்.3/2021**

1.சரோஜா (எ) சந்திரபானு
2.ஜெயலட்சுமி
3.ராஜேஸ்வரி ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/ எதிர் /

ஜெயசீலன் ... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவானது கடந்த 27.10.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.மணிகண்டன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர் / வாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும். இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**ஆணையுரை**

இம்மனுவானது, எதிர்மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் வழக்குரையை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர் / வாதியால் அசல்

வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு எதிர் வழக்குரைக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி தாவா ஆவண பட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள 10ம் ஆவணத்தை மனுதாரர் / பிரதிவாதியின் தந்தை செல்லமுத்துக் கவுண்டர், சின்னம்மாள் அவருடைய கணவர் வத்தக்கவுண்டன் ஆகியோர்களிடமிருந்து ராமலிங்க செட்டியார் கிரையம் பெறுள்ளார். அவரிடமிருந்து 21.01.1977ம் தேதியில் எதிர்மனுதாரர் / வாதி, அவருடைய அண்ணன் விஜயமோகன், அவருடைய தகப்பனார் எம்.கே.ஆறுமுகம் 11ம் ஆவணத்தை கிரையம் பெற்றுள்ளனர். பின்னர் 10.02.1989ம் தேதியில் பாகப்பிரிவினை செய்துள்ளனர். ஆவணம் 14ன் படி பாகப்பிரிவினை செய்ததில் பி செட்டியூல் சொத்து விபரத்தில் உள்ள சொத்து எதிர்மனுதாரர் / வாதியின் அண்ணன் விஜயமோகனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பி செட்டியூல் சொத்து தான் தாவா சொத்து. பாக பிரிவினை ஆவணத்தில் மூல ஆவணத்தை பற்றிய விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. 1977ம் தேதியில் க.ச.724ல் 1 ஏக்கர் மட்டுமே எதிர்மனுதாரர் / வாதியின் குடும்பத்தினர் கிரையம் பெற்றுள்ளனர். ஆனால் பாகப்பிரிவினை ஆவணத்தில் 2.30 ஏக்கர் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் 17 செண்ட் எதிர்மனுதாரர் / வாதியின் அண்ணன் விஜயமோகன், மனோன்மணியம் அம்மாளிடமிருந்து கிரையம் பெற்றார். மீதி 1.13 செண்ட் பற்றி எதிர்மனுதாரர் / வாதியின் வியாஜ்ஜிய மூலம் வழக்குரையில் எழவில்லை. மேற்படி 1 ஏக்கர் சொத்து தற்பொழுது எதிர்மனுதாரர் / வாதியின் அண்ணன் விஜயமோகன் அவர்கள் பாகமான பி செட்டியூல் சொத்தில் வரும் நிலையில் தாவா சொத்து எதிர்மனுதாரர் / வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது வியாஜ்ஜிய மூலம் வழக்குரையில் எழவில்லை. எதிர்மனுதாரர் / வாதிக்கு உரிமையில்லாத தாவா சொத்தில் செயல்நோக்கமோ அல்லது வியாஜ்ஜிய மூலமோ எழவில்லை என்பதால் மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரங்களை கோர முடியாது. எனவே, தாவா நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். 4ம் பிரதிவாதி அரசு அதிகாரி என்ற நிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 80(A)

மனுவுடன் இணைத்து பிராதினை தாக்கல் செய்ய வேண்டிய நிலையில் அது பற்றி தாவாவில் குறிப்பிடாததால் வழக்கு நிராகரிக்கப்பட வேண்டியது என்று கூறப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>** :

மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் மனு பொய்யும், மோசடியானது என்பதால் சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் / வாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்கள் / பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும். பிரமாண பத்திரத்தில் 2வது பத்தியில் சொல்லியுள்ள விபரம் குழப்பமாக உள்ளதால் அதனை பற்றி கூற இயலவில்லை. மனுதாரர் / 1ம் பிரதிவாதி வழக்குரையில் வழக்கெழு மூலம் இல்லை என்பதால் வழக்கினை நிராகரிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் / 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மோசடி செய்யும் நபர்கள் என்ற நிலையில் மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்தும், வருவாய் துறையில் பொய்யான ஆவணங்களை ஏற்படுத்தியும், அதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் தீர்ப்பாணை பெறும் வழக்கம் உடையவர்கள். மனுதாரர்கள் / பிரதிவாதிகள் செல்லமுத்து கவுண்டரின் மகள்கள் என்று பொய்யாக கூறி சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தங்களது தகப்பனார் யார் என்பதை மறைத்து 3 நபரான செல்லமுத்து கவுண்டரின் மகள்கள் என்று கூறி வருகிறார்கள். 1948ம் வருடத்திய ஆவணத்தின் படி எதிர்மனுதாரர் / வாதியின் தாயார் வள்ளிநாயகத்தின் ஒரே மகன் ஒரு கிருஷ்ணசாமி பிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோல் 1979ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி செல்லமுத்து கவுண்டர் மற்றும் அவரது தாயார் செல்லம்மாள், வள்ளி நாயகம் ஆகியோர்களுக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தில் வள்ளி நாயகத்தின் கணவர் பழனியப்ப பிள்ளை என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. உடுமலை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.வ.எண்.96/1975 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரையில் செல்லமுத்து கவுண்டரின் முதல் மனைவிக்கு குழந்தைகள் இல்லை என்றும், இரண்டாவது மனைவியான மனோன்மணியம்மாளுக்கும் குழந்தைகள் இல்லை என்பதால் செல்லமுத்து கவுண்டருக்கு வாரிசுகள் யாரும் இல்லை. ஆனால் செல்லமுத்து கவுண்டர் மற்றும் மனோன்மணிம்மாளின் மகள்கள் என்று மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வாரிசு சான்று கோரி வழக்கினை தாக்கல் செய்து மோசடியான வாரிசு சான்று பெற்றதின் அடிப்படையில் 2, 3 மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள், 1ம் மனுதாரர் / பிரதிவாதிக்கு ஆதரவாக 14.08.2020ம் தேதியில் ஒரு பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளனர். மேற்படி சொத்து ஏற்கனவே எதிர்மனுதாரர் / வாதியின் குடும்பத்தினரால் கிரையம் பெறப்பட்டுள்ள நிலையில் மேற்படி பாகப்பாத்திய விடுதலை பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும், 23.11.2020ம் தேதியில் மாவட்ட பதிவு அலுவலர் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள எதிர்மனுதாரர் / வாதிக்கு உத்தரவிட்டுள்ளார். மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தொடர்ந்து மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து வருகிறார்கள். தாவா தாக்கல் செய்யப்பட்ட பிறகு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஆனைமலை வட்டாச்சியரிடம் அளவீடு செய்து பெயர் மாற்றம் செய்ய மனு கொடுத்துள்ளனர். 23.04.2021ம் தேதியில் ஆனைமலை வட்டாச்சியரால் செல்லமுத்து கவுண்டர், மனோன்மணியம்மாள் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து விற்பனை செய்து விட்டதால் அவர்களது பெயரில் எவ்வித சொத்துக்களும் இல்லாததால் அதனைப் பொறுத்து பெயர் மாற்றம் செய்ய இயலாது என்று மனுவினை நிராகரித்துள்ளார். வழக்கினை காலம் கடத்தும் நோக்கத்திலே மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுவானது தள்ளுபடிக்குரியது என்று கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) இம்மனுவானது, எதிர்மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் வழக்குரையை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / பிரதிவாதிகள், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில், சாட்சிகளும், சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

7) மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்துக்கள் செல்லமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் அவரிடமிருந்து ராமலிங்க செட்டியார் கிரையம் பெற்றுள்ளதாகவும், அவரிடமிருந்து எதிர்மனுதாரர் / வாதி குடும்பத்தினர் கிரையம் பெற்றுள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் சொத்துக்களை பாகம் செய்து கொண்டதில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் பி செட்டியூல் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்து தான் தாவா சொத்து என்றும், மேற்படி பி செட்டியூல் சொத்து எதிர்மனுதாரர் / வாதியின் சகோதரர் விஜயமோகனுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர் / வாதிக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், பாகப்பிரிவினை ஆவணத்தில் உரிமை மூல ஆவணங்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றும், தாவா சொத்தில் எதிர்மனுதாரர் / வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லாத நிலையில், அவர் எவ்வித வியாஜ்ஜிய மூலமும் இல்லாமல் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் வழக்குரையை நிராகரிக்க வேண்டுமென்றும், அசல் வழக்கின் 4ம் பிரதிவாதியான மாவட்ட பதிவு அலுவலர் அரசு ஊழியர் என்ற நிலையில் அவருக்கு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 80(A)-ன் கீழ் சட்ட அறிவிப்பினை அனுப்பாமல் எதிர்மனுதாரர் / வாதி வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் வழக்கினை நிராகரிக்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

8) எதிர்மனுதாரர் / வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்தை எதிர்மனுதாரர் / வாதி குடும்பத்தினர் ராமலிங்க செட்டியாரிடமிருந்து கிரையம் பெற்ற பிறகு தாவா சொத்தினைப் பொறுத்து குடும்பத்தினரிடையே 10.02.1989 ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட பாகத்தின் போது தாவா சொத்து எதிர்மனுதாரர் / வாதிக்கும் அவரது சகோதரரான விஜயமோகன் என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி சொத்தினைப் பொறுத்து தான் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மோசடியான பாகப்பாத்திய விடுதலை ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், அவ்வாறு தாவா சொத்தினைப் பொறுத்து மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பாகப்பாத்திய விடுதலை பத்திரம் எழுதுவதற்கு எவ்வித உரிமையும் இல்லாத நிலையில், மேற்படி ஆவணத்தை ரத்து செய்யக் கோரி மாவட்ட பதிவு அலுவலர் அவர்களை அணுகிய போது பதிவு அலுவலர் அவர்கள் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ள காரணத்தால் உரிமையியல் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ள உத்தரவு பிறப்பித்ததின் அடிப்படையில் எதிர்மனுதாரர் / வாதி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, அது தொடர்பாக மீண்டும் அரசு அதிகாரரியான 4ம் பிரதிவாதிக்கு ஒரு சட்ட அறிவிப்பை அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்றும், மேலும், அசல் வழக்கின் 4ம் பிரதிவாதியான அரசு அதிகாரிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோராத நிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 80(A)ன் கீழ் அறிவிப்பினை 4ம் பிரதிவாதிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்பதாலும், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் வழக்குரையை நிராகரிப்பதற்கு தேவையான உட்கூறுகளை கொண்டிராத நிலையில் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

9) இருதரப்பு வாதுரையிலிருந்தும், வழக்கு ஆவணங்களின் பரிசீலனையிலிருந்தும் அசல் வழக்கானது 14.08.2020ம் தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலை பத்திரம் செல்லா நிலையானது என்று விளம்புகை

பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் எதிர்மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

10) மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து ஆதியில் ஒரு செல்லமுத்து கவுண்டர் மற்றும் சின்னம்மாளுக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் அதனை ராமலிங்க செட்டியார் கிரையம் பெற்றதாகவும், அவரிடமிருந்து 21.01.1977ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் படி எதிர்மனுதாரர் / வாதியின் குடும்பத்தினர் கிரையம் பெற்றுள்ளதாகவும், மேற்படி தாவா சொத்தினைப் பொறுத்து பாகம் செய்து கொண்டபோது தாவா சொத்து எதிர்மனுதாரர் / வாதியின் சகோதரரான விஜயமோகன் என்பவருக்கு பி செட்டியூல் சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்து விபரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து விஜயமோகனின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்தில் எதிர்மனுதாரர் / வாதிக்கு யாதொரு உரிமையும் இல்லாத நிலையில் வழக்கினை தாக்கல் செய்வதற்கு எதிர்மனுதாரர் / வாதிக்கு வழக்கெழு மூலம் எழவில்லை என்றும், அசல் வழக்கின் 4ம் பிரதிவாதி அரசு அதிகாரி என்ற நிலையில் அவருக்கு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 80(A)ன் கீழ் சட்ட அறிவிப்பினை அனுப்பாமல் வழக்கினை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறானது என்பதாலும், வியாஜ்ஜிய மூலம் எழாத காரணத்தினாலும், செயல் நோக்கம் இல்லாத காரணத்தினாலும், வழக்கினை நிராகரிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

11) எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாவா சொத்து ராமலிங்க செட்டியாரிடமிருந்து எதிர்மனுதாரர் / வாதியின் குடும்பத்தினர் கிரையம் பெற்று பாகம் செய்த போது தாவா சொத்தானது எதிர்மனுதாரர் / வாதி மற்றும் அவரது சகோதரரான விஜயமோகன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி சொத்தினை பொறுத்து தான் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்யும் எண்ணத்தில் 14.08.2020ம் தேதியில் ஒரு

மோசடியான பாகப்பாத்திய விடுதலைப் பத்திரத்தை 2, 3 மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள், 1ம் மனுதாரர் / 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்து அதனை ஆனைமலை வட்டாச்சியர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளதாகவும், எனவே, மோசடியான ஆவணத்தை மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பதிவு செய்த அன்றே தாவா சொத்தைப் பொறுத்து வழக்கு தாக்கல் செய்ய எதிர்மனுதாரர் / வாதிக்கு வழக்கெழு மூலம் எழுந்துவிட்டதாகவும், மேற்படி மோசடியான விடுதலைப் பத்திரத்தை ரத்து செய்யக் கோரி மாவட்ட பதிவு அலுவலர் அவர்களிடம் முறையிட்ட போது மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டு விட்ட காரணத்தால் மேற்படி ஆவணத்தைப் பொறுத்து உரிமையியல் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தியதின் அடிப்படையில் தாவா வழக்கினை எதிர்மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கின் 4ம் பிரதிவாதியான அரசு அதிகாரிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோராத நிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 80(A)ன் கீழ் சட்ட அறிவிப்பினை 4ம் பிரதிவாதிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்பதால் வழக்குரையானது ஏற்றுக் கொள்ளதக்கது என்பதால் அதனை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

12) மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர் / வாதி வழக்கினை தாக்கல் செய்வதற்கு வழக்கெழு மூலம் எழுவில்லை என்று கூறப்பட்டுள்ளது. வழக்குரையுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள 07.06.1966ம் தேதியிட்ட கிரைய ஆவணம், 21.11.1977ம் தேதியிட்ட கிரைய ஆவணம், 10.02.1989ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் மற்றும் 14.08.2020ம் தேதியிட்ட விடுதலைப் பத்திரம் ஆகியவற்றை பரிசீலிக்கும்போது எதிர்மனுதாரர் / வாதியின் குடும்பத்தினரின் கிரையதாரரான ராமலிங்க செட்டியாரிடமிருந்து 1977ம் தேதியில் தாவா சொத்தை எதிர்மனுதாரர் / வாதியின் குடும்பத்தினர் கிரையம் பெற்றுள்ளதாகவும், மேற்படி கிரையம் பெற்ற சொத்தைப் பொறுத்து 10.02.1989ம் தேதியில் எதிர்மனுதாரர் / வாதியின்

குடும்பத்தினரிடையே பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தின் சர்வே எண்ணான 724 ஐ தான் எதிர்மனுதாரர் / வாதியின் குடும்பத்தினர் கிரையம் பெற்றுள்ள நிலையில் சர்வே எண்.724 ஐ பொறுத்து 14.08.2020 ம் தேதியில் 2, 3 மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள், 1 ம் மனுதாரர் / 1 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பாகப்பாத்திய விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

13) மேற்படி பாகப்பாத்திய விடுதலைப்பத்திரமானது மோசடியாக 2, 3 மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகளால் 1 ம் மனுதாரர் / 1 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்துள்ளதாக எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி சொத்தினை கிரையம் பெற்றதாக கூறப்படும் எதிர்மனுதாரர் / வாதி மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்ட நாளிலேயே தாவா வழக்கினை தாக்கல் செய்ய வழக்கெழுமூலம் எழுந்துவிட்டதாக எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

14) ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளவாறு, தாவா சொத்தின் சர்வே எண்.724 ஐ பொறுத்து எதிர்மனுதாரர் / வாதியின் குடும்பத்தினர் கிரையம் பெற்றுள்ள நிலையில் அதனைப் பொறுத்து மனுதாரர்கள் / பிரதிவாதிகள் 14.08.2020 ம் தேதியில் ஒரு பாகப்பாத்திய விடுதலைப் பத்திரத்தை ஏற்படுத்தி அதனை ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளதாக தெரிய வரும் நிலையில் வழக்கினை தாக்கல் செய்ய எதிர்மனுதாரர் / வாதிக்கு வழக்கெழு மூலம் எழுந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) அடுத்ததாக, அசல் வழக்கின் 4 ம் பிரதிவாதியாக கோவை மாவட்ட பதிவு அலுவலர் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பாக அவருக்கு சட்ட அறிவிப்பினை உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 80 (A)ன் கீழ் எதிர்மனுதாரர் / வாதி அனுப்ப தவறியுள்ளதால் வழக்கினை நிராகரிக்க வேண்டுமென்று மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

16) எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் அசல் வழக்கின் 4ம் பிரதிவாதி அரசு அலுவலர் என்ற போதிலும் வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 14.08.2020ம் தேதியிட்ட மோசடியான பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தை ரத்து செய்யக் கோரிய போது மாவட்ட பதிவு அலுவலர் அவர்கள் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டுவிட்ட காரணத்தால் மேற்படி ஆவணத்தை ரத்து செய்யும் அதிகாரம் அவருக்கு இல்லை என்றும், மேற்படி ஆவணத்தைப் பொறுத்து உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ள அறிவுறுத்தி பிராதுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள 16ம் ஆவணத்தில் 23.11.2020ம் தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் / வாதி உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி பாகப்பாத்திய விடுதலைப் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் அசல் வழக்கின் 4ம் பிரதிவாதியான மாவட்ட பதிவு அலுவலருக்கு எதிராக யாதொரு பரிகாரமும் கோரப்படாத நிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 80(A)ன் கீழ் அறிவிப்பினை அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

17) பிராதுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள 16ம் எண் ஆவணத்தை பரிசீலிக்கும் போது 23.11.2020ம் தேதியில் எதிர்மனுதாரர் / வாதி 14.08.2020ம் தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலைப் பத்திரத்தை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்ததின் அடிப்படையில் ஒரு பதிவுற்ற ஆவணத்தை ரத்து செய்ய மாவட்ட பதிவு அலுவலருக்கு அதிகாரம் இல்லை என்பதால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

18) மேலும் அசல் வழக்கின் 4ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த ஒரு பரிகாரமும் கோரப்பட்டதாக வழக்குரையில் இருந்து தெரிய வரவில்லை. எனவே,

எதிர்மனுதாரர் / வாதி வழக்கை வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 14.08.2020ம் தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலைப் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் அதனை ரத்து செய்ய உத்தரவிடக் கோரி மாவட்ட பதிவு அலுவலரை அணுகியுள்ள நிலையிலும், மாவட்ட பதிவு அலுவலருக்கு மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய அதிகாரம் இல்லாத காரணத்தால் உரிமையியல் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு எதிர்மனுதாரர் / வாதி அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையிலும், எதிர்மனுதாரர் / வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

19) எனவே, உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 80(A)ன் கீழ் சட்ட அறிவிப்பை அனுப்பாமல் எதிர்மனுதாரர் / வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தால் இவ்வழக்கு பாதிப்படையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுவதால் அதன் காரணமாக வழக்குரையை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20) மேலே விவாதித்த வகையில் வழக்கினை தாக்கல் செய்ய எதிர்மனுதாரர் / வாதிக்கு வழக்கெழு மூலம் எழுந்துள்ள காரணத்தாலும், உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 80 (A) ன் கீழ் சட்ட அறிவிப்பினை 4ம் பிரதிவாதிக்கு அனுப்பாத காரணத்தால் எதிர்மனுதாரர் / வாதியின் வழக்கு பாதிப்படையவில்லை என்றும் முடிவு செய்துள்ள காரணத்தால் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாவா வழக்கினை நிராகரிக்க கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்பதால் நீதியின் நலன் கருதி இம்மனுவினை தள்ளுபடி செய்யலாம் என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

21) முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகின்றது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்/–G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

– இல்லை. –

**எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

– இல்லை. –

(ஒப்பம்/–G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**
அ.வ.எண்.389/2020 இல் இ.ம.எண்.3/2021
நாள் : 24.11.2021
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---